இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 83 – ஒலி: 114 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 18 – செவ்வாய்க்கிழமை 03 டிசம்பர் 2024 – கோவை ★ ★ 8 பக்கங்கள்  Established: 10.8.1942 - Volume: 83 - Issue 114: Thiruvalluvar Year - 2055 - Karthigai 18 - Tuesday 03 December 2024 - Kovai ★ ★ 8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.12.2024) ”ஃபெஞ்சல் புயலால், தொடர்ந்து மழை பெய்துவருவதையொட்டி, கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, 24 ”A சாலையில் உள்ள குளத்தினை மேம்படுத்தும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.12.2024) ஃபெஞ்சல் புயலால், தொடர்ந்து மழை பெய்துவருவதையொட்டி, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு அனுமதிக்கப்பட்டுள்ள உள்நோயாளிகளிடம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், ப.ரங்கநாதன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின்,

# மழை நிவாரணப் பணிகளை ஆய்வு செய்தார்!

**சென்னை, டிச.3-**

**வங்கக் கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருவதையொட்டி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டப் பகுதிகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.**

வங்கக் கடலில் உருவான “ஃபெஞ்சல் புயல்” காரணமாக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, உடனடியாக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 30.11.2024 அன்று சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டு, கனமழை எச்சரிக்கையின் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, மழை நீர் உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைத்து, அவர்களுக்கு உணவு, பாதுகாப்பான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கினார். பின்னர், தலைமைச் செயலகத்திற்குச் சென்று உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து, இராயபுரம், சூரியநாராயணன் தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த உணவுக்கூடத்திற்கு நேரில் சென்று, பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உணவு தயாரிக்கப்படும் பணிகளையும், பூக்கடை பேருந்து நிலையம் மற்றும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகிய இடங்களில் உள்ள கழிவுநீர் உந்து நிலையத்திற்கு நேரில் சென்று, மழை நீர் மற்றும் கழிவு நீர் வெளியேற்றப்படும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, மழைநீரை உடனடியாக அகற்றுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**அதைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.12.2024) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டப் பகுதிகளில் மழைநீர் வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். அதன் விவரங்கள்;**

### செல்வி நகர், மழைநீர் வெளியேற்றும் நிலையம் ஆய்வு!

கொளத்தூர், செல்வி நகர் பகுதியில் மழைநீரை அகற்றுவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள 1.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மழைநீர் சேகரிப்பு தொட்டியில் சேகரிக்கப்படும் மழை நீரானது, நெடுஞ்சாலைத்துறையின் மழை நீர் வடிகாலில் மோட்டார் பம்ப் மூலம் வெளியேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், இவ்விடத்தில் மழைநீர் வெளியேற்றம் செய்யப்பட்டு, இப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

### சீனிவாசன் நகர், நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு!

அதைத் தொடர்ந்து, சீனிவாசன் நகரில் உள்ள நகர ஆரம்ப சுகாதார நிலையத்தினை பார்வையிட்டு, ஆய்வு செய்து அங்குள்ள மருத்துவர்களிடம் மழைக்காலங்களில் ஏற்படும் நோய்களுக்கான மருந்துகளை கையிருப்பில் வைத்துக்கொண்டு, உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாள்தோறும் சுமார் 200 பேர் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜி.கே.எம். காலனியில் குளம் மேம்படுத்தும் பணி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய உந்து நிலையம் ஆய்வு!**

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய உந்து நிலையத்தின் செயல்பாட்டினையும், 24 “A” சாலையில் உள்ள குளத்தினை மேம்படுத்தும் பணிகளையும் முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

### பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் சிறப்பு ஆய்வு!

பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் 109 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் ஆறு தளங்களுடன், தீவிர சிகிச்சைப் பிரிவு, விபத்து காய சிகிச்சைப் பிரிவு, பிரசவ அறை, நரம்பியல் மருத்துவம், புற்றுநோயியல் கண் மருத்துவப் பிரிவுகள், இருதயவியல் புறநோயாளிகள் உள்நோயாளிகள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆஞ்சியோ அறுவை அரங்கம், இ.சி.ஜி, எக்கோ மற்றும் டிரெட்மில் சோதனை போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் 3 கோடி ரூபாய் செலவில் மழை நீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், மருத்துவமனையின் உள்ளேயும், வெளியேயும் மழைநீர் தேங்கவில்லை.

முதலமைச்சர் அவர்கள், பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனைக்கு நேரில் சென்று, அங்குள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களிடம் மின்தடை ஏற்பட்டால் ஜெனரேட்டர் வசதிகளையும், அவசர சிகிச்சைக்கான மருந்துப்பொருட்கள் போன்ற அத்தியாவசிய ஏற்பாடுகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், இம்மருத்துவமனையில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்றுவருபவர்களிடம் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகள் குறித்தும், அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பொதுமக்கள், முதலமைச்சர் அவர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் மழை நீர் எந்தப் பகுதிகளிலும் தேங்கவில்லை என்றும், சில பகுதிகளில் இருந்த மழைநீரை உடனுக்குடன் அகற்றப்பட்டதற்கும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### பெஞ்சல் புயல்: கடலூர் – கிருஷ்ணகிரி – தருமபுரி

# மாவட்டங்களில் மழை வெள்ள பாதிப்பு - நிவாரணப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கேட்டறிந்தார்!

**விழுப்புரம், டிச. 3 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூரில் தென்பெண்ணை ஆறு வெள்ளப் பாதிப்பு குறித்து நேற்று (02.12.2024) காணொலிக் காட்சி வாயிலாக வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களிடம் கேட்டறிந்தார்.**

சாத்தனூர் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் அதி கனமழை பெய்ததால் 1,70,000 கன அடி தண்ணீர் சாத்தனூர் அணையிலிருந்து தென்பெண்ணை ஆற்றுக்கு திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கடலூர் மாவட்டத்தில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் புகுந்தது. இதனை வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கடலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட முத்தையா நகரில் பார்வையிட்டு ஆய்வு செய்து வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சியின் வாயிலாக வெள்ளப் பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயலால் தொடர் கனமழை பெய்ததையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை நேற்று (02.12.2024) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக பயணம் மேற்கொண்ட போது,

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்ட ஆட்சியர்களுடன் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு ஃபெஞ்சல் புயலால் தொடர் கன மழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பாக கேட்டறிந்தார்.

### கிருஷ்ணகிரி - தருமபுரிக்கு பொறுப்பு அமைச்சர்கள்!

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தருமபுரி மாவட்டத்திற்கு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் ஆகியோரை உடனடியாக மாவட்டங்களுக்கு நேரில் சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

---

### கடும் மழையால் பாதிக்கப்பட்ட

# விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களைச் சந்தித்து ஆறுதல்!

## நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்!

**விழுப்புரம், டிச.3-**

**கனமழையால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.**

கனமழை காரணமாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

சென்னையை அடுத்த மாமல்லபுரம் பகுதியில் கனமழை காரணமாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன் நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, கனமழையால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் நேரில் ஆய்வு மேற்கொள்வதற்காக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து சாலை மார்க்கமாக புறப்பட்டார்.

இந்த நிலையில் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் பகுதியில் உள்ள முத்தமிழ் அரங்கில் மழை காரணமாக தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். பின்னர் அவர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். இதனைத் தொடர்ந்து அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ முகாமினை அவர் ஆய்வு செய்தார்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் பாலாஜி, ஒன்றிய குழு தலைவர் இதயவர்மன், மாவட்ட ஆட்சியர் அருள்ராஜ் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.